Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தமிழ் தியாகய்யர் திரு.பாபநாசம் சிவன்

SRIPRIYA. S
Email ID: shripriyashini@gmail.com

## 1. முன்னுறை:-

கலைகள் என்பது மனிதன் இறைநிலையை அடைய உதவும் பாலமாகும் . நுண்கலைகள் என்பது கண்கள் மற்றும் செவிகளாலும் ஆத்மாவை இறைச்சக்தியில் நிலைபெறச் செய்பவை கலையின்பமே நிலை இன்பமாகும் . நுண்கலைகளுல் சிறந்தது இசை . இது இசைப்போர்க்கும் கேட்போர்க்கும் இன்பத்தை அளிப்பவை. இதில் இசைச் செல்வமும் இலக்கியச் செல்வம்மும் இணைந்திருப்பவர்கள் அரிய பொக்கிஷம் ஆவர். இசை மும்மூர்த்திகளான ஸ்ரீதியாகராஜர் , ஸ்ரீமுத்துஸ்வாமி தீட்சிதர் மற்றும் ஷ்யாமா ஸாஸ்திரிகள் மூவரும் தெலுங்கு சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் பல உருப்படிகளை இயற்றியுள்ளார்கள். இவர்களைப் பின்பற்றி பலர் தெய்வீக இசையை வளர்த்தனர். திரு.கோபாலகிருஷ்ண பாரதியார் , திரு.அருணாச்சல, கவிராயர், திரு.முத்துதாண்டவர் போன்றோர் தமிழில் பல அழியாக் காவியங்களை இசை வடிவமாய் தந்தனர். இவர்களின் அடிப்பற்றி தமிழ் வாக்கேயகார்கள் இசைத்தொண்டு செய்தனர். அப்படிப்பட்ட வாக்கேயகார்களின் வரிசையில் 20ஆம் நூற்றாண்டில் நம்முடன் வாழ்ந்தவர் திரு.பாபநாசம் சிவன் அவர்கள். அவரைப் பற்றின தகவல்கள் ஓர் கண்ணோட்டமாய் இவண் காண்போம்.

## 2. பிறப்பு மற்றும் இளம்பிராயம்

சங்கீத மும்மூர்த்திகள் அவதரித்த தஞ்சாவூர் மாவட்டம் நன்னிலம் தாலுகாவில் பூலோக கைலாசான போலகம் என்னும் கிராமத்தில் 1890 செப்டம்பர் 26, அதாவது புரட்டாசி மாதம் சனிக்கிழமையன்று சதய நட்சத்திரத்தில் திரு.இராமாம்ருதம் , திருமதி.யோகாம்பாள் தம்பதிக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். குழந்தைக்கு இராமசர்மா என்று பெயரிட்டார்கள் . சுருக்கமாக இராமைய்யா என்று அழைத்தார்கள் . சிவன் அவர்கள் தனது 7ஆம் வயதிலேயே தன் தகப்பனாரை இழந்தார், தனது தாயுடனும் தமையனுடனும் நிருவனந்தபுரத்தை அடைத்தார். இராமையா அவர்கள் கி.பி. 1897 வரை சிறியதகப்பனாருடன் இருந்தார். அவர் பெரிய சமஸ்கிருத பண்டிதர் . இவரது தாயும் பாட்டனாரும். நல்ல இசைஞானமும் குரலினிமையும் வாய்ந்தவராய் இணைந்து பாடுவார்கள்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

### 3. கருவிலே பிள்ளையார் சூழி:-

தன்னுடைய தாயாரைத் தெய்வமாய் கருதியவர் பாபநாசம் சிவன் அவர்கள். எழுதப்படிக்க தெரியாத தன் அன்னை ஆயிரக்கணக்கானப் பாடல்களைக் கற்றுக்கொண்டதில் அநேக வியப்பு அவருக்கு உண்டு. சங்கீத மும்மூர்த்திகளின் கீர்த்தனைகள் மூந்நூறுவரை அறிந்திருந்தார். அம்மாவுக்கு க்ஷேத்ரக்ஞர் பதங்களும் , கோபாலகிருஷ்ண பாடல்களும் அவர் அறிந்திருந்தார். இவற்றைத் தவிர அக்கால பெண்களுக்கே உரித்தான கல்யாணப்பாடல்கள் நலங்கு , கும்மி, ஊஞ்சல், ஒடம், கும்மி கோலாட்டம் போன்ற பாடல்கள் அவர் மனனம் செய்து வைத்திருந்தார்.

சிவன் அவர்களின் இசையறிவுக்கும் குரல் இனிமைக்கும் காரணம் அவரின் அன்னையின் கருவில் வாசம் செய்ததாலே என்று அவர் பூரிப்புடன் கூறிக்கொள்வார்.

### 4. கல்வி மற்றும் இசைப்பயிற்சி:-

1898 முதல் 1907 வரை சமஸ்கிருத கலா சாலையில் படித்தார். அங்கே உபாத்யாய வயாகரனி போன்ற பட்டங்களைப் பெற்றார். இந்த பத்து வருடங்களில் சமஸ்கிருத மொழியிலும் மாலையாள மொழியிலும் தேர்ச்சி பெற்றார்.

இக்காலகட்டத்தில் நூரணி பரமேஸ்வர பாகவதரின் புதல்வரான மஹாதேவ பாகவதர் சிவனாரின் குரல் இனிமையும் இசையார்வம் கருதி சங்கீத ஆரம்பப் பாடங்களை கற்பித்தார். இசை புலமையை நன்கு வளர்த்துக் கொண்டார். மேலும் ஸ்ரீநீலகண்ட தாஸர் என்ற பக்த சிரோன் மணியின் நட்பும் அவரது பஜனையில் பேரும் பெற்றார். மகாராஜா ஸ்வாதி திருநாள் அவர்களின் கிருதிகளை பத்மனாப ஸ்வாமி ஆலயத்தே நான்கு பிரகாரங்களிலும் ப்ரமோத்ஸவத்தின் போது பாகவதர் நாற்பதிற்கும் மேற்பட்டவர் கூடி பாடுவார்கள் , அதன்மூலம் மகாராஜாவின் கீர்த்தனைகள் அவருக்கு பாடமாயின.

இவரது இசைப்பயிற்சி சிவனாரின் தயாரிடமும் பாலகாடு பரமேஸ்வர பாகவதரிடமும் , சாம்ப பாகவதரிடமும் மகாதேவ பாகவதரிடமும் நேம்ம் நடேச பாகவதரிடமும், முறையாக கற்றார்.

இந்நிலையில் இந்நிலையில் சமஸ்கிருத பாடசாலை மாணவர்களுக்கு கிடைத்து வந்த உதவிப்பணம் நிறுத்தப் பட்டதால், திருவனந்தபுரம் விட்டு திருச்சியில் பழமார்னேரி எனும் கிராமத்திற்ககு வந்தார். தாயாரும் உடல்நிலை பாதிப்பால் இயற்கை ஏய்தினார் . இராமைய்யாவின் சங்கீதப் பயணம் கோயில்களில் பஜனைகள் செய்ய ஆரம்பித்தார்.

### 5. அரங்கேற்றமும் தம்ழ் தியாகய்யர் பட்டமும்-

அரங்கேற்றம் மற்றும் தமிழ் தியாகய்யர் பட்டம் பெயர் 1910ம் ஆண்டு திருவாரூர் தியாகேசன் சந்திதியில் குத்தலவராளி இராகத்தில் தம்முயை முதல் பாடலை அரங்கேற்றினார் .

'உன்னைத் துதிக்கவருள் தா இன்னிசையுடன்" அங்கு நின்று கொண்டிருந்த மகாவித்வான் சிமிழி சுந்தரமய்யர் ஆனந்தத்தின் உச்சிக்கே சென்று விட்டார். தியாகராஜர், தமிழ்ல பாடல்கள் எழுதாம போய்விட்ட குறையைப் போக்கிக் கொள்ள இப்ப சிவனா வந்து பிறந்திருப்பார்னு.... இவர் தமிழ் தியாகப்பர் என்று போற்றினார். இன்று தமிழ் தியாகய்யர் என்ற பெயர் நிலைத்து நிற்கிறது.

**6. இராமைய்யா 'பாபநாசம் சிவனாய்':-**

இராமைய்யா ஒரு இடமும் தங்காதவராய் தேசாந்தரியாய் ஒவ்வொரு தலங்களாக சென்று இறைப்பணியும், பஜனையும், இசைப்பணியையும் செய்து வந்தார். இவரது இந்த பயணத்தில் கணபதி அக்ரஹாரத்தில் உள்ள சிவன் கோவிலில் நெற்றி கைகளில் விபூதி பட்டை தீட்டி கழுத்தில் ருத்ராட்சம் அணிந்து தன்னை மறந்து தாயுமானவரின் 'அரும்பொன்னே மணியே ' பாடலை விஸ்தாரமாய் பாடிய , சிவப்பழமாய் காட்சியளித்த இராமைய்யாவை, சாம்ப சிவய்யா என்ற பக்தர் கைலாசத்திலிரந்து ஷாக்ஷாத் சிவன் இங்கு வருகைதந்தார் என்று போற்றினார். இப்படி சிவனான இராமைய்யா , பாபனாசத்தில் தமிழாசிரியராகப் பணியாற்றிய தன் தமையனார் இராஜகோபாலய்யருடன் சிறிது காலம் சென்று தங்கினார். அதனாலேயே பாபநாசம் சிவன் என்ற பெயர் பெற்றார்.

**திருமணபந்தம்:-**

திருவாரூர் வக்கில் மகாதேவய்யரும் பழைய வலம் சுப்பையர் போன்றோ சேர்ந்த தனியே தேசாந்தரியாக சுற்றிக்கொண்டிருந்த சிவணை தெற்குப்பனையூரின் ரயில்வேயில் பணிபுரிந்த ஐய்யாஸ்மி அய்யரின் குமாரி ஸௌ லக்குமி என்பவரைத் திருமணம் செய்து வைத்தனர். இவருகளுக்கு நீலா இராம்மூர்த்தி, பனையூரின் கீர்த்திவாஸன், இராமதாஸன் டாக்டர்.ருக்மணிரமணி என்ற வாரிசுகள் பிறந்தனர். திருமதி.நீலா இராமமூர்த்தி கதை பாடல்கள் எழுதுவார் ,, வானொவியிலும் பாடினார் . டாக்டர்.ருக்மணிரமணி இவர் தற்போதும் சிறந்த எழுத்தாளராகவும் தந்தையாரின் பாடல்களைப் பயின்று பாடுதல் , அவரின் பாடல்களையும் இசைக்கலையையும் கற்பித்தல் போன்றவற்றில் பங்காற்றுகிறார்.

**7. இசைப்பணி:-**

பாபநாசம் சிவன் அவர்கள் இயல் மற்றும் இசையில் நன்கு தேர்ந்தவராக விளங்கினார். இவர் தனது முத்திரையாக 'ராமதாஸ' என்று பதித்து வர்ணம், இசை நாடகங்கள், ஜாவளி ஆகிய பல இசை வடிவங்களை இயற்றியுள்ளார்.

இவர் ஜெயதேவரின் அஷ்டபதியை தமிழில் மொழி பெயர்த்தார். அவற்றிக்கு விரிவுரையையும் வழங்கியுள்ளார் 'வடமொழி சொற்கடல்' என்ற வடமொழி தமிழ் அகராதியைத் தொகுத்து வாழங்கியுள்ளார். இவரது கீர்த்தனைகள் மற்றும் வர்ணங்களில்

தமிழையும், சமஸ்கிருதத்தையும் இரு கண்களாக பாவித்தார். கோயில்களில் முன்னின்று பல பாக்களை இயற்றினர்.

சிவன் அவர்கள் தேச விடுதலைக்கு தொண்டாற்றி உள்ளார். ஜாலியன் வாலாபாத் படுகொலை நடந்த தினம் நாடெங்கும் கூட்டங்களில் தேசிய கீதம் பாடுவார் நாட்டுப்பற்றக் கொண்ட சிவன் அவர்கள் பாரத மாதாவை பற்றி மனமுருகி 'அன்னையின் கால்களில் விலங்குகளோ என்று பாடினார். தியாக பூமியில் மகாத்மா காந்தியிடம் கொண்ட பேரன்பு வெளிப்பட்டது. 'சுதந்திரம்' ஜீவமந்திரத்தை கேட்டதும் 'நம் நாடு சுதந்திரமடைந்த இந்நாளை பொன்னால் பொறித்திட வேண்டும் என்று மகிழ்வுடன் பாடினார். ஜய பேரிகை கொண்டாடுவோம் என்ற பாடலை நம் தேசத் தலைவர்களை நன்றி கூறும் விதமாக "மேருவனைய தீரன் இராஜாஜியை . . . . என்று பாராட்டினார். பாரதியாரின் மீதுள்ளப் பற்று 'பாமாலைக் கிணையுண்டோ' என்ற பாவில் வெளிப்பட்டது.

கவி மனதிற்கு பிடித்த வஸந்த காலத்தை 'வஸந்த ருது மோஹனமே என்ற இராக முத்திரையுடனும்,, கடலுக்குவனம் கடலே பாடலில் ஓங்கார நாதத்தையும் வருணிக்கிறார். 'கதிரைவன் உதயம் கண்ட கமலங்கள் முகம் மலரும் ' என்று மலரும் மலர்களை விவரித்துள்ளார்.

இவ்வாறு இயற்கையையும் மனிதனையும் விலங்குகளையும் இணைத்து அனேக பாடல்களைப் பாடியுள்ளார்.

### 7. கலாக்ஷேத்ராவின் சிவனாரின் இசைப்பணி-

1937களில் சென்னைக்கு நிரந்தரமாக குடியேறினார். மிரம்ஞான சாபவில் "பாபநாசம் சிவன் அவர்களை இசைகற்பிக்க வருமாறு ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் மற்றும் திரு.சங்கரமேனன் அவர்களும் அழைத்தனர் , ஆறு ஆண்டுகள் சென்னை கலாக்ஷேத்ராவின் இசைப்பிரிவின் தலைவராய் பணியாற்றினார்.

இதைத் தவிர ருக்மணி அருண்டேலின் நடன நிகழ்வுகள் பலவற்றிற்கு சிவன் அவர்கள் பாடல்களை இயற்றியும் பாடியும் உள்ளார். ஆண்டாள் , கிருண்ஷ்குமாரிக் குறவஞ்சி கண்ணப்பர் குறவஞ்சி தமிழிலும், கீத கோவிந்தம் சாகுந்தலம், கூர்மவதாரம் தசாவதாரம் போன்றவை சமஸ்கிருதத்திலும் இயற்றப்பட்ட நாட்டிய நாடகங்களுக்கு இசையமைத்துள்ளார்.

### 7.2 திரைப்படத்துறையில்:-

1935களில் சிறப்பான தடத்தை பதித்தார். நமத சிவன் அவர்கள் . சீதா கல்யாணம் , பக்தகுசேலா அம்பிகாபதி , சிந்தாமணி, சேவாசதனம். திருநீலகண்டர் தியாகபூமி , சந்திர குப்த சாணக்யா , அசோக்குமார், சிவகவி, கன்னிகா ஆகிய படங்களுக்கு இசை யமைத்துள்ளார்.

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

**பாடல் எழுதப்பட்ட திரைப்படங்கள்**

சீதா கல்யாணம்- 22 பாடல்கள், பவளக் கொடி- 60, அசோக்குமார் - 90, பாடல்கள், சிவகவி-29 பாட்ல்கள் ஹரிதாஸ் , மீரா போன்ற திறைப்படங்களுக்காக எழுதியப் பாடல்கள் புகழ்வற்றவை.

1.மன்மத லீலையை வென்றார் உன்டோ

2. ராதே உனக்கு கோபம் . . . . (சிந்தாமணி 1937)

3 அம்பா மனங்கனிந்து . . . . .(சிவகவி 1943)

**நடித்த திரைப்படங்கள்**

1. பக்த குசேலா - இந்த படத்தில் பாடிநடிந்திருந்தார்

2. தியாகபூமி

3. சேவா சதனம்

4. குபேர குசேலா

ஏறத்தாழ பல திரைப்படங்களுக்கு மொத்தமாக 800 பாடல்களை எழுதியுள்ளார். நவீன சதாரம் என்ற படத்தில் 'மா ரமணன் உமா ரமணன் ' என்ற இந்தோள ராகப்பாடலை சிஷ்யன் மணியுடன் இணைந்தும் 'சீதா கல்யாணம் ' என்ற பைரவி ராகப் பாடலையும், குபேர குஸேலா என்ற படத்தில் ஸாரஸ பூம்பாதம் என்ற பொஷால் பெஹாக் ராகப்பாட்டையும் பின்னனியில் பாடியுள்ளார் . திரை இசைக்கும் ஓர் கௌரவத்தை கர்நாடக இசை வல்லுநர்களும் பாராட்டும் வகையில் தனியான மவுசை ஏற்படுத்தி கொடுத்தார்.

**8. கர்நாடக இசையில் முத்திரை பதித்தவர்:-**

இராமதாஸன் என்ற முத்திரையை கையாண்டு பல இராகங்களில் 2500க்கும் அதிகமான கிருதிகளை இயற்றியுள்ளார் இராமாயணத்தைச் சுருக்கி 24 இராகங்களில் 24 பாடல்களாக 'ஸ்ரீராம சரித கீதம்' எனும் நூலை இயற்றினார். காரைக்கால் அம்மையார் சரிதம் என்னும் இன்று நாடக நூலை எழுதினார்.

ராமதாஸ என்ற தனது முத்திரையை வலுவில் புகுத்த மாட்டார் தாஸனாக இறைஞ்சும் நேரங்களில் தானாக வார்த்தைகளுன் வந்து சேரும் பல கிருதிகளில் இராக முத்திரைகள் அமைந்திருக்கும்.

வர்ணங்கள் கீர்த்தனைகள் , தரு, தில்லானா, கண்ணிகள், திருப்புகள், நொண்டிச்சிந்த வழிநடைச்சிந்து, மங்களம் வரை அத்தனை வகைகளையும் சுவையுற படைத்தள்ளார். வர்ணங்களில் பதவர்ணங்களும் , தாள வர்ணங்களும் , இவை முறையே நடன அரங்குகளில் ஆடப்பெற்றும், இசை அரங்குகளில் பாடப்பெற்றும் வருகின்றன.

விளம்ப, மத்திம துரித காலத்தில் ஆதி , ரூபக, சாபு ஜம்பை, ஏக தாளங்களிலும் சமஷ்டி சரணம், மத்திம கால சாஹிதயங்கள் சிட்டை , ஸ்வரங்கள் கொண்ட கிருதிகள் பலப்பலவாகும்.

1) கருணாகரனே – சிவசங்கரனே
2) குருவாயூரப்பா - குழந்தாய் முகுந்தா
3) ஏறெடுத்தும் பாராத காரணம் என்னவோ
4) கற்பகமே கண் பாராய்
5) கணபதே மகாமதே
6) மஹாலக்ஷ்மி ஜகன்மாதா
7) காணக் கண் கோடி வேண்டும் - காம்போதி
8) காவாவா கந்தா வா வா – வராளி
9) ஸ்ரீ வள்ளி தேவ சேனாதிபாத நடபைரவி
10) தாமதமேன் - தோடி
11) கடைக்கண் - தோடி
12) கார்த்திகேய காங்கேய – தோடி
13) என்ன தவம் செய்தனை – காபி போன்றனவ தமிழ் உருப்படிகளில் கால் பதித்த சிவன் அவர்கள் 50 பாடல்ககள் வரை சமஸ்கிருதத்திலும் இயற்றியுள்ளார்.

**9. சீடப்பரம்பரையினர்:-**

சிவனின் சீடர்கள் என்ற வகையில் எஸ்.எஸ் மணி அய்யர் ஒருவரே குருகுலவாசம் செய்தவர். பிரபல இசை விற்பன்னர்களான Dr.M.S. சுப்புலக்ஷ்மி, டி.கே.பட்டம்மாள், மதுரை மணி அய்யர் , துறையூர் ராஜகோபால சர்மா , மருத்துவக்குடி கேடிகே ஐயராமன், திரு.S.ராமனாதன் ஆகியோர் நேரிடையாக அவரது சில பாடல்களை கற்றனர்.

**10. காலத்தால் அழியா புகழ்:-**

முழு நேரக் கச்சேரியாக கோவில் திருமண நிகழ்ச்சிகளில் அன்பர்களின் சபைகளில் இரவு 9 மணிக்கு தொடங்கினால் 2 மணி வரையும் கூடப் பாடிக் கொண்டே இருப்பார். மும்மூர்த்திகள், கோபால கிருஷ்ண பாரதி , அருணாச்சலக்கவி, தேவாரம், திருவாசகம் தயுமாணவர் பாடல்கள் , திருப்புகழ் உருப்படிகளிலும் , இயற்றி இசையமைத்த உருப்படிகளும், உண்டு. ஒரு கச்சேரிக்கு வேண்டிய அத்துனை உருப்படிகளையும் சிவன் அவகள் இயற்றியுள்ளார். இராகப்பூர்வமாய் இராகமும் பாவமும் இணைந்து கேட்பவரை ஓர் தியான நிலைக்கு அழைத்துச் செல்லும்.

1. சிமிழி சுந்தரம் அய்யா என்பவர் 'தமிழ் தியாகய்யர் என்று அழைத்தார்.

2. இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டி இவரைப் பாராட்டி "சங்கீத ஸாகித்ய கலாசிகாமணி' என்ற பட்டத்தை வழங்கியது.

3. 60வது ஆண்டு நிறைவு விழாவில் பரமச்சாரியார் காஞ்சித்தவமுனி "சிவபுண்யகானமணி' பட்டத்தை வழங்கினார்.

4. 1962ல் ஜனாதிபதி பரிசு கிடைத்தது.

5. 195ல்த் தமிழிசைச் சங்கம் இசை பேரறிஞர்

6. 1972ல் சங்கீத நாடக அக்கடமியில் பெல்லோ (fellow ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

7. 1972 இந்திய அரசால் 'பத்மபூஷண்' என்ற விருது கிடைக்கப் பெற்றது. சென்னை மியூசிக் அகாடமி "சங்கீத கலாநிதி பட்டம் வழங்கியது.

**11. காலத்தை வென்றவர்:-**

மயிலை மாட விதியில் , பங்குனி உத்தர விழாவில் கம்பீரமாக பாடுவார். கோயில் கோயிலாக சென்று பாடுவார். உடல் தள்ளாமை வந்த பிறகு வெளியூர் சென்று பஜனை செய்வதை நிறுத்திட வேண்டியிருந்தது. ஆனாலும் தனது விட்டில் கோகுலாஷ்டமி , புரட்டாசி சனிக்கிழமை ஆகியவற்றை கொண்டாடி பஜனை செய்வார். தனது 83வது வயதில் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் மரணவேதனையிலும் சிவாய நம , நமச் சிவாய என்ற இறை நாமங்களை உச்சரித்த வண்ணம் இருந்தார் அவரது கடைசிப்பாடலாக 'கூவி அழைக்கக்கூடாதா குருபரா. . . .என்ற பாடலைப் பாடி இறைவன்பால் தன் மனம் செல்ல கண்கள் மூடிய நிலையில் 1-10 1973 ஆண்டு இறைவனின் பொற்பாதம் சேர்ந்தார்.

**12. முடிவுரை:-**

மார்கழி மாத பஜனைகளில் , மயிலை மாட வீதிகளில் பங்குனி உத்திர திருநாளில் தமிழ் தியாகய்யர் எனப் போற்றப்படும் பாபநாசம் சிவன் அவர்களின் பூத உடல் மறைந்தாலும் அன்னாரின் குரலும் , பாடல்களும் இன்றளவும் இசைக்கப்பட்டு வருகின்றன. இது காலத்தால் அழிக்க முடியா பன்முகப் படைப்பாகும் - இவரின் இசைப்பற்று , இறைப்பற்றுடனும் தேசப்பற்றுடனும் பின்னி பிணைந்துள்ளது. தன்னை முழுமையாய் இவ்வுலகிற்கு அடுப்பணித்தவர். பல துறைகளில் தோச்சி வெற்றவர் . பல்துறை வித்தகர் ஹரி கதை செய்தல் , பாடலாக்கம் செய்தல் , திரைப்பட பாடல்கள் இசையமைத்தல், பாடுதல் நடித்தல் , போன்றவற்றிலும் மொழிபெயர்ப்பாளர் , நாட்டிய நாடகம் , இசை நாடகங்கள் இயற்றியவர் . நடன அரங்குகள் மற்றும் இசை அரங்குகளில் இவருடைய பாடல்கன் புகழின் உச்சியை இன்றளவும் தொட்டுகொண்டிருக்கிறது

இவரின் படைப்புகள் காலத்தால் அழிய ஓவியங்கள் போன்றவை . இவரின் படைப்புகளுக்கு தமிழிசையும், கலைத் துறையும் என்றென்றம். கடமைப் பட்டுள்ளது.

**உசாத் துணை நூல்கள்**

1. வீயெஸ்வி விகடன் பிரசுரம்

2. இந்து தமிழ் பிரசுரம் 2008 செப்

3. ருக்மணிரமணி ஸ்ரீ பாநாசம் சிவன் சரிதம் சித்திரை 1987, S.S.பதிப்பகம், சென்னை

4. வியெஸ்வி விகடன் பிரசுரம், 380 முற்பதிப்பு Sep 2008.

5. பாபநாசம் சிவன் பாடல்கள்